**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

**முன்னிலை - திரு K. ராஜேஷ்கண்ணன்., B.A.B.L.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, மயிலாடுதுறை.
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி(முழுக் கூடுதல் பொறுப்பு)

-------

2022-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04-ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2053, சுபகிருது வருடம் ஆடி மாதம் 19-ம்நாள்

------

**அசல் வழக்கு எண்.06/2021 -ல் இடைமனு எண். 01/2022**

ஜெகதீசன் ...மனுதாரர்/பிரதிவாதி

...எதிர்...

இளங்கோவன் ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 21.07.2022 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். சேயோன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு எஸ். சுவாமிநாதன் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரையில் என் பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக 20.11.2011-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பாள் உத்தரவை நீக்கரவு செய்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை 9, விதி 7-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. அசல் வழக்கானது 20.11.2011-ம் தேதியன்று மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் அன்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜராகி தமது வழக்கறிஞருக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கான விவரம் கூறமுடியவில்லை. எனவே மனுதாரர்களுக்கு எதிராக 20.11.2011-ம் தேதியன்று ஒருதலைப்பாள் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்/பிரதிவாதி 20.11.2011-ம் தேதியன்று நீதிமன்றத்தில் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ ஆஜராகாமல் இருக்கவில்லை. எனவே 20.11.2011-ம்

தேதியன்று மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பாளர் உத்தரவை நீக்கரவு செய்யாவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே மனுதாரர்/ பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கில் 20.11.2011-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பாளர் உத்தரவை நீக்கரவு செய்து உத்தரவிடக்கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. **<u>எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபணைக் குறிப்பாணையின் சுருக்கம்</u>**

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர் உண்மைகளை மறைத்து பொய்யானவற்றை கூறி இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் மனுவின் ஆணையுறுதிப்பத்திரத்தில் அவருக்கு உடல்நிலை சரியில்லை என்றும், அதனால் வழக்கறிஞரை சந்திக்க முடியவில்லை என்றும் கூறியுள்ளாரே தவிர மனுதாரருக்கு என்ன நோய் என்று ஆணையுறுதிப் பத்திரத்தில் குறிப்பிட்டுக் கூறவில்லை. மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை என்று காட்டுவதற்கு மருத்துவச்சான்றை தாக்கல் செய்யவில்லை. மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறுவது பொய்யானது. மனுதாரர் 20.11.2011-ம் தேதியன்று வேண்டுமென்றே நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்துள்ளார். வழக்கு நடவடிக்கைகளை காலங்கடத்துவதற்காக வேண்டுமென்றே ஒருதலைப்பாளர் உத்தரவிற்கு விட்டுவிட்டு தற்போது அதனை ரத்து செய்யவேண்டுமெனக் கோரி இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4.. **<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

மனுதாரர் /பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>தீர்வு</u>**

மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், அசல் வழக்கானது 20.11.2011-ம் தேதியன்று மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் அன்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜராகி தமது வழக்கறிஞருக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கான விவரம் கூறமுடியவில்லை என்றும், எனவே மனுதாரர்களுக்கு எதிராக 20.11.2011-ம் தேதியன்று ஒருதலைப்பாளர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்/பிரதிவாதி

20.11.2011-ம் தேதியன்று நீதிமன்றத்தில் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ ஆஜராகாமல் இருக்கவில்லை என்றும், அசல் வழக்கில் 20.11.2011-ம் தேதியன்று மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பாளர் உத்தரவை நீக்கரவு செய்யாவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும், எனவே மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கில் 20.11.2011-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பாளர் உத்தரவை நீக்கரவு செய்து உத்தரவிடக்கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

7. எதிர்மனுதாரர்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் உண்மைகளை மறைத்து பொய்யானவற்றை கூறி இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் மனுவின் ஆணையுறுதிப்பத்திரத்தில் அவருக்கு உடல்நிலை சரியில்லை என்றும், அதனால் வழக்கறிஞரை சந்திக்க முடியவில்லை என்றும் கூறியுள்ளாரே தவிர மனுதாரருக்கு என்ன நோய் என்று ஆணையுறுதிப் பத்திரத்தில் குறிப்பிட்டுக் கூறவில்லை என்றும், மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை என்று காட்டுவதற்கு மருத்துவச்சான்றை தாக்கல் செய்யவில்லை என்றும், மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறுவது பொய்யானது என்றும், மனுதாரர் 20.11.2011-ம் தேதியன்று வேண்டுமென்றே நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்துள்ளார் என்றும், வழக்கு நடவடிக்கைகளை காலங்கடத்துவதற்காக வேண்டுமென்றே ஒருதலைப்பாளர் உத்தரவிற்கு விட்டுவிட்டு தற்போது அதனை ரத்து செய்யவேண்டுமெனக் கோரி இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்குக்கோப்புக்களை பரிசீலனை செய்தபோது இந்த அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரர்/ பிரதிவாதிக்கு எதிராக சுவாதீன மீட்பு பரிகாரம் மற்றும் செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக 20.11.2011-ம் தேதியன்று வாய்தா போடப்பட்டிருந்து அன்றையதினம் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமையால் அசல் வழக்கானது ஒருதலைப்பாளர் சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டு நிலுவையிலுள்ளது தெரியவருகிறது. மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் 20.11.2011-ம் தேதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகி தமது வழக்கறிஞரை சந்தித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ய் முடியவில்லை என்று காரணம் என்று கூறப்பட்டுள்ளது. மனுதாரருக்கு என்ன நோய் என்பதற்கோ, எந்த மருத்துவரிடம் சிகிச்சை பெற்றார் என்பதற்கோ எவ்விதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு அவர்கள் தரப்பு கட்சியை

எடுத்துரைக்க போதுமான வாய்ப்பு வழங்குவது அவசியமானது என்று கருதி மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும்விதமாக மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கில் 20.11.2011-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பாள் உத்தரவை நீக்கரவு செய்யக்கோரியுள்ள இம்மனுவை அனுமதித்து மனுதாரர்/பிரதிவாதிக்கு ஒரு வாய்ப்பு கொடுத்து அசல் வழக்கில் மனுதாரர்/ பிரதிவாதிக்கு எதிராக 20.11.2011-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்து மனுதாரர் தரப்பு கட்சியை கேட்டு மேற்கொண்டு வழக்கை நடத்த அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. மேலும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதித்து மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் கட்சி செய்து வழக்கை நடத்த அனுமதிப்பதே இவ்வழக்கில் சரியான தீர்வு காணவும், இவ்வழக்கின் மீது ஏற்படும் பல்வேறு மேல்நடவடிக்கைகளையும் (Multiplicity of proceedings) தடுக்கும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே தரப்பினர்களுக்கு வழக்கை நடத்த போதிய வாய்ப்பு வழங்குவது அவசியமானது என்று கருதி மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும்விதமாக மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கில் 20.11.2011-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்து உத்தரவிடக்கோரியுள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும், மனுவின் தன்மையை கருதி இம்மனுவில் இருதரப்பினரும் அவரவர்கள் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் இந்நீதிமன்றம் முடிவுசெய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

10. முடிவில், இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| <u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை- |
| <u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> | -இல்லை- |
| <u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> | -இல்லை- |
| <u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை- |

மா.உ.நீ (மு.கூ.பொ.)

நேரிய/வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண். 06/2021-ல்
இடைமனு எண். 01/2022
நாள் - 04.08.2022.